விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 30 ஸபர் 10 இதழ் 275

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-11-83

## "ஈழத்தமிழர் வேற்றுமைகளை முதலில் தீர்க்கவேண்டும்!"

### தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கூறுகிறார்

(சென்னை)

"இலங்கைத் தமிழர் பிரச்னையை நாம் நிதானமாக அணுகவேண்டும். இலங்கைத் தமிழர்களிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அவற்றை முதலில் தீர்த்து, அவர்களை நாம் ஒற்றுமைப் படுத்த வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுக் கூறினார்.

தமிழ்நாடு சட்டசபையில் தமது அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

மூன்று நாள் இவ்விவாதம் நடந்தது. விவாதத்தின் இறுதியில் முதலமைச்சர் பதிலளித்துப் பேசுகையில், இலங்கைத்

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழர் பிரச்னை அமெரிக்க உதவித் தூதுவர்-(அ.தி.மு.க.) சண்முகம் சந்திப்பு!

## நீண்டநேரம் ஆலோசனை

(சென்னை)

**சென்னையிலுள்ள அமெரிக்க உதவித் தூதுவர், அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. பா.உ. சண்முகத்தை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடினர்.**

இச்சந்திப்பின் போது வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை என்றும், இலங்கைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக முக்கியமான பேச்சுக்கள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக அமெரிக்க உதவித்தூதுவரிடம் அ. தி.மு.க. முன்னர் மகஜர் ஒன்று சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இம்மகஜர் தொடர்பாகவும் அமெரிக்க உதவித் தூதுவரும் அ. தி மு க. தலைவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

## அத்துமீறிக் குடியேறுபவர்மீது சட்ட நடவடிக்கை எடுங்கள்!

### அரசாங்க அதிபர்களுக்கு உத்தரவு

(கொழும்பு)

அரச காணிகளில், அத்துமீறிக் குடியேறியுள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் படியும், குடியேறுபவர்களைத் தடுக்கும் படியும் ஜனாதிபதி தம்மிடம் பணித்திருப்பதனை உடன் செயல் படுத்துமாறு மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு நந்தா அபயவிக்கிரம கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நாட்டின் பிரஜைகளாக இருந்தாலும் பிரஜைகளாக இல்லா விட்டாலும், குடியேறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் புதிதாகக் குடியேறுபவர்களைத் தடுக்கும் படியும் சுற்று நிருபத்தில் கோரியுள்ளார்.

தங்கள் மூலம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி ஜனாதிபதி தம்மிடம் பணித்திருப்பதையும் சுற்று நிருபத்தில் வலியுறுத்தியுள்ளார். (இ)

## ஒய்வூதியம் பெறுவோருக்கு நேற்றுக்கிடைத்த ஏமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதமதபால் அலுவலகம் மற்றும் உபதபால் அலுவலகங்களில் நேற்று ஓய்வூதியம் வழங்கப்படாததினால், பல நூற்றுக்கணக்கான ஓய்வூதியம் பெறுவோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

"மறு அறிவித்தல் வரை ஓய்வூதியம வழங்கப் படமாட்டாது" என்று யாழ். பிரதம தபால் அதிபரின் அறிவித்தல் ஒன்று, யாழ். தபால் கந்தோரில் காணப்படுகிறது. ஓய்வூதியம் பெற நேற்று வந்தவர்கள் நண்பகல் வரை தபால் கந்தோர் விறாந்தையில் காத்திருந்தனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த 78 வயதான கதிரி என்ற மூதாட்டியும் பென்ஷன் பெற நேற்று யாழ். தபாலகத்துக்கு வந்திருந்தார். நீண்ட நேரம் காத்திருந்த பின்னர் மற்றொரு மூதாட்டியுடன் அவர் வீடு திரும்பினர்.

77 வயதான வி. கதிரவேலு என்பவர், ஓய்வூதியப் பணம் பெற யாழ் தபாலகம் வந்திருந்தார் இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். சுகவீனமுற்று படுக்கையில் இருந்தவர்.

நல்லூரரைச் சேர்ந்தவர் திரு. தெட்சணாமூர்த்தி. (வயது 68.) அவரும் நீண்ட நேரம் காத்திருந்தபின், வீடு சென்றார். இப்படிப் பலர் ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை

(8-ம் பக்கம்பார்க்க)

## குழந்தையும் தெய்வமும்

(சென்னை)

தமிழ்நாடு சிவானந்த ஜோதி ஆச்சிரமம், இலங்கையிலிருந்து வந்த நாற்பத்துஆறு இந்திய வம்சாவழி அகதிக் குழந்தைகளை தத்து எடுத்துள்ளது.

இராமேஸ்வரத்திலுள்ள மண்டபம் முகாமுக்குச்சென்ற சிவானந்த ஜோதி ஆச்சிரம நிர்வாகி திரு. ராஜாராம் பெற்றோரை இழந்து நிர்க்கதியாக தாயகம் வந்த இந்தக் குழந்தைகளை கண்டு பரிதாபப்பட்டு, தமது ஆச்சிரமத்துக்கு தத்து எடுத்துக்கொண்டார்.

## "இலங்கைத் தமிழர் பிரச்னையை இந்திராவினல் மட்டுமே தீர்க்கமுடியும்!"

### தமிழக சஞ்சிகை கருத்து

(சென்னை)

"இலங்கைப் பிரச்னையில் இந்திரா காந்தியைத் தவிர வேறு யாரும் எதுவும் செய்ய முடியாது என்பது தெளிவு. திருமதி இந்திரா காந்தி இதனைச் சாதிப்பார் என்று இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் நம்புகிறார்கள்"

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் 'இதயம் பேசுகிறது' வார இதழில் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இன்று இலங்கைத் தமிழர்களின் பிரச்னை உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது இலங்கைத் தமிழர்களின் தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு எஸ் தொண்டமான் ஆகியோர் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணவேண்டுமானல், அது பாரதப் பிரதமரின் முயற்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## இன்று பட்ஜட்

(கொழும்பு)

இன்று நாட்டின் ஏழாவது 'பட்ஜட்'! பாராளுமன்றத்தில், நிதிஅமைச்சர் திரு ரொனி டி மெல்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் மாநகரசபை வீதிகள் அபிவிருத்திக்கு ரூபா 25 லட்சம் ஒதுக்கீடு!

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம் மாநகரசபை வீதிகள் அபிவிருத்திக்கு உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 25 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

இத்தகவலை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நேற்றுத் தெரிவித்தார்

கடந்த வருடம் வீதி அபிவிருத்திக்கு 5 லட்சம் ரூபா மட்

(8ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட ஊழியர்களில் 75 வீதமானோர் திரும்பவில்லை!

(யாழ்ப்பாணம்)

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களில் 75 சதவீதமானோர் வேலைக்குத் திரும்பவில்லை என்று பாதிக்கப்பட்ட ஊழியர் சங்க செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டு வந்த 5500 பேர்களில், 4000 பேர், அரச கூட்டுத்தாபன ஊழியர்களென்றும் அண்மையில் எடுக்கப்பட்ட மதிப்பீடு மூலம், தெரிவதாகவும் அவர் கூறினர்.

இவர்களில் சிலருக்கு மட்டும் அக்டோபர் மாத சம்பளம் வழங்கப் பட்டுள்ளதாகவும், சிலருக்கு ஆகஸ்ட்மாத சம்பளம்கூட வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட ஊழியர் சங்க தலைவர் ராஜலிங்கம்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இராசபாதவீதி உரும்பிராய் எல்லையருகில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. த. தர்ம ஜெயசூரியர், கற்பகப் பிள்ளையார்வீதி, உரும்பிராய். 9882

புனரமைக்கப்பட்ட ISUZU மினி பஸ்களும், டிரக்குகளும் (Trucks) விற்பனைக்குண்டு. ELF 250 (தனிச்சக்கரம்/இரண்டு சக்கரம்)' ELF 350 (KS 21 / 31 - அரை பொடி), ELF 150 / 250-15 ஆசன மினி பஸ்கள் (Low and High Roof Buses) வாங்க விரும்புவோருக்கு பினான்ஸ் வசதி செய்து தரப்படும். Inter Truck Company, 37, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 9884

இராஜ வீதியில் கரந்தன் சந்திக்கு அருகாமையில் 300 யார் தூரத்தில் வீடு கட்ட உகந்த 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிதம்பரப்பிள்ளை நடராசா, குறுக்கு றோட், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 9897

தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து 150 யார் தொலைவில் மகாஜனக் கல்லூரி வீதியில் 2-4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ஜெ. ஜெயக்குமாரன், புகையிரத வீதி, தெல்லிப்பழை 9904

சுன்னாகம் லைபிரறி. A. G. ஒப்பிஸ்சுக்கு அருகாமையில் கிணற்றுடன் வீடுகட்டப்பட்ட நிலையில் 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்கட்கு தியாகராசா - சண் கோஸ் ரூடியோ, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். 9907

யாழ் நகர் நாச்சிமார் கோயிலடி 561 K K S வீதியிலுள்ள வீடுஉடனே விற்பனைக்குண்டு. 3 3/1பரப்பு விலை 8½. தரகர் வேண்டாம்- Dr. T. இரத்தினசிங்கம், ''பாரக்காய்'' புலோலி தெற்கு, புலோலி. 9906

காங்கேசன்துறையில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக கல்வீடும் கடையும் கொண்ட 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு என். சோதிலிங்கம், பருத்தித்துறை வீதி, தையிட்டி, காங்கேசன் துறை. 9910

1 ஸ்ரீ ஒஸ்ரின் 50 3000 தொடர்இலக்க [நல்லபாவிப்பு Standard Engine] கார் உடன் விற்பனைக்குண்டு. ''குமார கிரி'', பழையதபாற்கந்தோர் ஒழுங்கை, கொக்குவில். 9927

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலுக்கருகாமையிலும், கீரிமலை K. K. S. றோட்டு சேதுகாவலம் பிள்ளை J. P. வீட்டுக்கருகாமையிலும் வீடுகட்டக் கூடிய இரண்டு காணித்துண்டுகள் உடனடியாக விற்பனைக்குண்டு. அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை S. பத்மனாதன் ஆசிரியருடன் தொடர்புகொள்ளவும். 9908

கடைசியாக வெளிவந்த Micro-Computer (புத்தம் புதியது) விற்பனைக்கு உளது. இங்கிலிஷ் மேக் Oric-1, K-48 அதேக கூடிய தொழிற்பாட்டுடன் கொள்விலையைத்தெரிவிக்கவும். விபரங்களுக்கு: செந்தில்நாதன் கிருணியார் வளவு, ஈவினை, புன்னாலைக்கட்டுவன். 9913

## தேவை

சிலிண்டர் மெசினில் வேலை செய்யக்கூடியவர் உடன் தேவை. நேரில் வரவும். ஆர் எஸ். அச்சகம், யாழ்ப்பாணம். 9923

வசாவிளானிலுள்ள 100 பரப்பு தோட்டத்தை (மரக்கறி+பழம்) தங்கியிருந்துநிர்வகிக்கவும். மேற்பார்வைசெய்யவும் கூடிய ஒருவர் தேவை, எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பரதாரர் 44A, Flower Road, Colombo-7. 9922

மணமகள் தேவை. யாழ். நகர் இந்துவேளாள குடும்பத்தைச்சேர்ந்த 31 வயது. (உயரம்) 5' 7'' - H. N. D in Electrical and Electronic Engineering (3rd Year Final) அழகான தோற்றமுள்ள செவ்வாய் குற்றமில்லாத மகனுக்கு தகுந்த வாழ்க்கைத் துணை தேவை சாதககுறிப்பு மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9925 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9925

இரும்பு கிறில் கேற் வேலை அனுபவம் கொண்ட வெல்டர், சேர்விஸ் ஸ்ரேசன் வாசர் கிறீசர் வேலை அனுபவம் கொண்டவர்கள் தேவை. பரஸ்கோ பருத்தித்துறைவீதி, நல்லூர். 9911

யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனமொன்றுக்கு தொழில் அனுபவமுள்ள வெல்டேர்ஸ், பிற்றேர்ஸ், ரேணேர்ஸ் உடன் தேவை. அனுபவத்துக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9900 மே/பா ஈழநாடு, யாழ்ப்பணம். 9900

பிரபல்யமான கற்பூரத் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தொடர்பு: 132, ஆடியபாதம் றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில் (சந்தைக்கு முன்பாக.) 9901

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K நடராஜா ஜே. பி. யை 'லிங்க கிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9782

## WANTED

Vacancies exsist for Security Guard to Serve in Jaffna: Chavakachcheri, Kilinochchi; Mannar, Point pedro. Ex Service man, Ex. Policeman Ex. Govt. Servants. with Knowledge of English. who are smart and fit. May apply with Copies of Testimonials and two Copies of Passport size photos. Application closes on 25-11-83. Advt No 9929 C/o Eelanadu, Jaffna. 9929

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

31ம் நாள்
நினைவு தினமும்
**நன்றி நவிலலும்**

செல்லத்துரை சுவாமியார்



தோற்றம்: 18-02-1922
மறைவு: 17-10-1983

சங்கைக்குரிய குருபாபா சுவாமிகளின் சிஷ்யன் செல்லத்துரை சுவாமியார் அவர்கள் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு நேரில் வருகை தந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எம் துக்கத்தில்பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

மனைவியும் பிள்ளைகளும்
கொக்குவில் மேற்கு. 9815

---

பின்னுறுதிக் கட்டளை பற்றிய
## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

குப்பிளான், ஏழாலையைச் சேர்ந்த செல்லையா துரைசிங்கத்தின் மரண சாதனமில்லா சொத்துக்கள் தொடர்பான விடயத்தில் மரண மடைந்தவர்

வழக்கு. இல ரி/139

துரைசிங்கம் கைம் பெண் இலட்சுமி குப்பிளான், ஏழாலை.

மனுதார்

எதிராக

1. துரைசிங்கம். ரவீந்திரன்,
2. துரைசிங்கம், சுரேந்திரன், (இறந்துவிட்டார்)
3. துரைசிங்கம், குலேந்திரன்,
4. துரைசிங்கம், வாசுகி (பராயமற்றவர்)
5. துரைசிங்கம், மாலினி, (பராயமற்றவர்)
6. துரைசிங்கம் புலேந்திரன், (பராயமற்றவர்)
7. பொன்னையா இராசையா.

எல்லோரும் குப்பிளான், ஏழாலை.

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம்ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்.

1983 கார்த்திகை மாதம் 3ம் திகதி இன்று முத்திரை இடப்பட்டது என்னால் எழுதப் பட்டது.

கா. ஜெகநாதன்
மனுதாரின் சட்டத்தரணி. 9928

---

## வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழையில் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சகல வசதியும் அடங்கிய வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ளும் முகவரி;

**A. மித்திரதேவா,**
அரசினர் ஆஸ்பத்திரி வீதி, தெல்லிப்பழை. 9918

---

யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி
## பரிசளிப்பு விழா

19-11-83 சனிக்கிழமை காலை 8-45 மணிக்கு எங்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதிகளாக வைத்திய கலாநிதி M வேற்பிள்ளை அவர்களும், அவரது பாரியாரும் கலந்து கொள்கிறார்கள். இவ்விழாவில் பெற்றோர், பழைய மாணவிகள், நலம் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி. 9931

---

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்
## பிரவேசம்—1984

தகைமை: க.பொ.த.(சாதாரணப்) பரீட்சையில் விஞ்ஞானபாடம் ஒன்று உட்பட ஐந்து பாடங்களில் திறமைச்சித்தி. வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு மூன்று பாடங்களில் திறமைச்சித்தி.

**விண்ணப்பங்கள்: 21-12-1983 வரை**

ஏற்றுக்கொள்ளப்படும்.

மனுப்பத்திரம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
127, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம், 9832

---

கடற்றெழில் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்
## குத்தகைக்கு
## 3 1/2 தொன் மீன்பிடிவள்ளங்கள்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இரண்டு 3½ தொன் மீன்பிடி வள்ளங்கள் மாதக்குத்தகைக்கு இழுவை/ படுப்பு சாதனங்களுடன் கொடுக்கப்படவுள்ளன. விரும்புவோர் மீளப்பெறமுடியாத பணமாக ரூபாய் 25/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் இருவள்ளத்திற்கும் தனித் தனியாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 28 - 11 -83 அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப் வேண்டிய முகவரி;

**நிறைவேற்று முகாமையாளர்,**
இலங்கை கடற்றெழில் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம். 9930

---

# ICMA & CHARTERED

Courses Commence:

## I. C. M A. MAY, '84

| | |
|---|---|
| WEEKDAY COURSE | |
| Section A | 25-11-83 |
| WEEKEND COURSES | |
| Section B | 26-11-83 |
| Prof. I | 26-11-83 |
| Prof. II | 26-11-83 |
| Chartered Prelim Nov 84. (only Auditing and Statistics) | 10-12-83 |
| Chartered Licentiate : Already in progress | |
| I. A. A. and D P. (only Data Processing) | 17-12-83 |
| London AEB (only Econs and Cey Adv Level ( Accounting ) (Eng. medium) | 25-11-83 |

Enrolment for single subject only in Statistics and O. P. for Section B of ICMA

S. Vanniasingham M. Sc (Econ) (Lond)
B. Com. (Lond)

VAIRAVAR KADADCHAM
Palaly Road, Thirunelvely,
Jaffna. (Phone 24424) 9917

# அணுசக்தி ஏவுகணைகளை மட்டுப்படுத்த அமெரிக்காவின் புதிய யோசனைகள்

## சோவியத்யூனியன் நிராகரிப்பு!

வாஷிங்டன், நவ. 15

ஐரோப்பாவில் நடுத்தர அணுசக்தி ஏவுகணைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா சில புதிய யோசனைகளை சோவியத் யூனியனிடம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இரு சாராரும் நிறுவவுள்ள நடுத்தர ஏவுகணைகளின் எண்ணிக்கையை 420 ஆகக் குறைக்கவேண்டுமென்பதே அமெரிக்காவின் புதிய யோசனையாகும்.

அணுஆயுதப் பரிகரணக் கொள்கை தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்தி வரும் சோவியத் பிரதிநிதிகளிடம் இத்திட்டம்பற்றிக் கூறப்பட்டது.

கடந்த செப்டம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் தெரிவித்த ஆலோசனைக்கு அமையவே இப்புதிய திட்டம் தயாரிக்கப்பட்டது.

அமெரிக்கா ஏவுகணைகளின் எண்ணிக்கை தொடர்பாக யோசனையொன்றைச் சமர்ப்பித்துள்ளது இதுவே முதற் தடவையாகும்.

இந்த யோசனைக்கு சோவியத் யூனியன் இணங்காவிட்டால் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் 572 நடுத்தர ஏவுகணைகளை அமெரிக்கா நிறுவவுள்ளது.

அமெரிக்க நடுத்தர ஏவுகணைகளின் ஒரு பகுதி நேற்று பிரிட்டனில் நிறுவுவதற்காக விமானமூலம் அங்கு எடுத்துச்செல்லப்பட்டது.

நேட்டோ நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அமையப் பிரிட்டனில் 170 நடுத்தர ஏவுகணைகளை அமெரிக்கா நிறுவவுள்ளது.

ஐரோப்பாவில் நடுத்தர ஏவுகணைகளை மட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவினால் தெரிவிக்கப்பட்ட புதிய யோசனைகளை சோவியத் யூனியன் நிராகரித்துள்ளதாக அந்நாட்டின் உத்தியோகபூர்வ செய்தி ஏடான 'டாஸ்' தெரிவித்தது.

(வெ)

## சோமுவுக்கு பாராட்டு

சென்னை நவ 15

''என் வாழ்வின் முன்னேற்றத்திற்கும், நல்வளர்ச்சிக்கும் பிரபலத்திற்கும், புகழுக்கும் முக்கிய காரணம். ராஜாஜி, டி. கே. சி, கல்கி ஆகிய மூவரும், எனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்களும் கௌரவமும் அவர்களைத்தான் சேரும்.''

தமிழகத்தின் உயர்ந்த கௌரவ விருதான ''ராஜா சார் அண்ணாமலைச்செட்டியார் விருது'' பெற்ற திரு. மீ. ப. சோமு. தமக்களிக்கப்பட்ட பாராட்டு விழவில் மேற்கண்டவாறு கூறினார்.

தாம்பரம் இறைபணி மன்றத்தில் பேராசிரியர் லெ. ப. கரு. ராமநாதன் செட்டியார் தலைமையில் நடந்த இவ்விழாவில் ராஜாஜியின் புதல்வர் திரு. சி. சி. ஆர் நரசிம்மன், திரு. மீ. ப. சோமுவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துப் பேசுகையில்:-

''திரு. மீ. ப. சோமு அவர்களுக்கும், தமது தந்தைக்கும் இடையே நிலவிய நெருக்கமான அன்புப்பிணைப்பையும், உயர்ந்த நட்புறவையும் பற்றிப்புகழ்ந்து வேறு எவருக்குமே கிடைக்காத பெரும் பேறுகிய தமது தந்தையுடன் இணைந்து நூல்கள் எழுதக்கூடிய நல்லவாய்ப்பும் தகுதியும் இருந்ததைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

விருதுபெற்ற ''நமது செல்வம்''. என்ற நூலைப்பாராட்டி கிறிஸ்துவக் கல்லூரியின் தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் திரு. க. வடிவேலாயுதனார், நகரசபைகளின் பிரத்தியேக உயர்அதிகாரி திரு சிவகுருநாதன், இலங்கை அகில உலக இந்துமகாநாட்டின் அமைப்புக் கமிட்டியின் தலைவர் திரு லட்சுமண ஐயர், பிரபல தொழில் அதிபர் திரு மணியன், திரு சுந்தரராஜ், ''ஆஸ்திக மணி திரு சுப்பிரமண்ய ஐயர்'' வழக்கறிஞர் திரு. சுப்பையா ஆகியோர் பாராட்டிச் சொற்பொழிவாற்றினார்கள்.

ஸ்ரீல ஸ்ரீ. காயத்ரிஸ்வாமிகளின் சார்பில் ஸ்வாமிகளின் சகோதரர் திரு. க. சுப்பிரமண்ய ஐயர் திரு. மீ. ப. சோமுவுக்குப்பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை கூறிப் பாராட்டினார். இறைபணி மன்றத்தின் தலைவர் திரு த. ஏகாம்பரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். (சு)

## பங்களாதேஷில் அடுத்தவருடம் பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள்

டாக்கா, நவ. 15

பங்களாதேஷ் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களுக்கான திகதிகள்பற்றி அந்நாட்டின் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அங்கு ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் மே மாதமும், பாராளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பர் மாதமும் நடைபெறவுள்ளது.

நாட்டு மக்களுக்கு நேற்று வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றிய போதே தேர்தலுக்கான திகதிகள்பற்றியும் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் அறிவித்தார்.

பங்களாதேஷில் ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தக் கோரி அங்குள்ள அரசியல் கட்சிகள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்தமை தெரிந்ததே.

(வெ)

## சிந்து மாகாணத்தில் குண்டு வெடிப்பு!

இஸ்லாமாபாத், நவ, 15

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்றுப் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுமாறும், பொதுத் தேர்தலை நடத்துமாறும் கோரி அந்நாட்டின் இராணுவ அரசுக்கெதிராகச் சிந்து மாகாணத்தில் இடம்பெற்ற பெரும் ஆர்ப்பாட்டங்களின்போதே இக்குண்டுவெடிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

பாகிஸ்தானில் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் இருந்துவருவது தெரிந்ததே.

(வெ)

## அசாமில் சட்டவிரோத ஆயுதங்கள் கண்டுபிடிப்பு!

கௌஹாத்தி, நவ. 15

அசாம் மாநிலத்தில் சட்டவிரோதமாக வைத்திருந்த ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும், துப்பாக்கிகளையும். கைக்குண்டுகளையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

சட்ட விரோதமான ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் பணி தொடர்ந்து நடைபெறும் என்று அசாம் முதலமைச்சர் தெரிவித்தார்.

அசாமின் வெளியார் பிரச்னை பற்றி விசாரணை மன்றங்கள் விசாரணைசெய்து வருவதாகவும் அவர் கூறினார்.

(வெ)

## எலிசபெத் மகாராணி பங்களாதேஷ் விஜயம்

டாக்கா, நவ. 15

பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணியும், அவரது கணவர் எடின்பரோ கோமகனும் நேற்றுப் பங்களாதேஷிற்கு விஜயம் செய்தனர்.

எலிசபெத் மகாராணி இம்மாதம் 17-ம் திகதி இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இம்மாதம் 22-ம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவமைப்பு நாடுகளின் மகாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளார்

(வெ)

## றோயல் கடற்படைக் கப்பல்களின் நல்லெண்ண விஜயம்

(கொழும்பு)

றோயல் கடற்படையைச்சேர்ந்த இரண்டு போர்க்கப்பல்கள் கொழும்புக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளன இவை17ந் திகதிவரை. கொழும்பில் தரித்து நிற்கும் எச் எம் எஸ் அக்கிலிஸ், எச் எம் எஸ் அன்ட்ரோமெடா என்ற இந்த இரு கப்பல்களுடன் கிரேறோவர் என்ற துணைக் கப்பலும் வருகிறது.

## அமெரிக்காவுக்கு ஈழத்து நூல்

(ஊரெழு)

அண்மையில் வெளியிடப்பட்ட ''ஆழ்கடலான்'' என்ற நூலின் சில பிரதிகள் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நூலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. யாழ். மத்திய கல்லூரி நூலகர் திரு. கே. மாணிக்கவாசகர் மேற்படி நூலின் பிரதிகளை அங்கு அனுப்பிவைத்துள்ளார். வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் தேவஸ்தானத்தின் வரலாற்றை ஆய்வு ரீதியாக விபரிக்கிறது இந்நூல்.

## விநோபாபாவே நினைவுதினம்

(புதுடில்லி)

பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்ய விநோபாபாவேயின் முதலாவது நினைவு தினம் நேற்று இந்தியாவின் பலபகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி ஆச்சாரிய விநோபாபாவேயின் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரையொன்றைத் தமிழ்நாடு அரசின் தபால், தந்தித்திணைக்களம் வெளியிட்டது. (வெ)

## தர்மப்பணம் அதிகரிப்பு: 15 லட்சம் ரூபா யாழ். வந்தது!

(யாழ்ப்பாணம்)

வறியவர்களுக்கு வழங்கப்படும் தர்மப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சமூகசேவைப்பகுதி 15லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்ட சமூகசேவைப் பகுதி பணிமனைக்கு அனுப்பிவைத்துள்ளது.

வறிய மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் தர்மப்பணம் தனி ஒருவருக்கு 35 ரூபாவும், கணவன் மனைவியாய் இருந்தால் 40 ரூபாவும் பிள்ளைகள் தொகைக்கேற்ப மேலும் 10 ரூபாப்படியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது தர்மப் பணம்பெறும் குடும்பத்தில் பிள்ளைகள் உட்பட 10 பேர் இருந்தால் 140 ரூபா வழங்கப்படும் என்றும் இது மேலும் குடும்பத்தொகைக்கேற்ப 150 ரூபாவாக அதிகரிக்கக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் தொடக்கம் இப் பண அதிகரிப்பு சமூகசேவைப்பகுதியால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும், உரிய பணம் வந்து சேராமையால் வழங்கப்படவில்லை. மேலும் வழங்கப்படாத பாக்கிப் பணமும் சேர்த்து இவ் வருஷ முடிவுக்குள் வழங்கப்படுமென தெரியவருகிறது.

பாக்கிப்பணம் வழங்குவதற்கென 2 லட்சம் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்து யாழ். சமூக சேவைப்பகுதி உதவிப் பணிப்பாளர்திரு. என். அமிர்தசாகரன், சமூகசேவைப்பணிப்பாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (மா-கு)

## இன்றைய பலன்

ஐப்பசி 30-ந் திகதி
புதன்கிழமை
(16-11-83)

மேடம்: எண்ணம் போல் வாழ்வுஇன்றுமலரும். சிலருக்கு திடீர் திரவியமும் கிடைக்கலாம். கன்னல் மொழி பேசி காரியத்தைச் சாதிப்பீர்கள். கவர்ச்சி கரமான பொருளை விரும்புவீர்கள்.

இடபம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும் உறவினர் மத்தியில் பூசல்கள் தோன்றும். இருப்பிடமாற்றத்தால் பொருள் நட்டம் ஏற்படும் பலவழிகளிலும் பணம் செலவாகும்.

மிதுனம்: படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள். புதுமனை கட்டுவதில் ஆலோசனை செய்வீர்கள். ஆக்கப்பணியில் ஈடுபடுபவர்கள் ஆதரவுண்டு. வாகன விருத்தியுண்டு.

கடகம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம். தகுதியில் முன்னேற்றமுண்டு. தாராளமான பொருள் கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றி உண்டு இதயம் பூரிப்படையும்.

சிங்கம்: தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கும் இடமுண்டு. ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

கன்னி: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். சாஸ்த்திர வழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கையில் ஈடுபடுவீர்கள்.

துலாம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். கலகச் செய்திக்கும் இடமுண்டு நிதியில் நெருக்கடி தோன்றும்.

விருச்சிகம்: மனம்போல் இன்றுவாழ்வு மலரும். கடமை

(6ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

சத்தியம், அறம், அடக்கமென்னும் மூன்று பண்புகளின் இருப்பிடமாக அமைந்த உள்ளமுடையோர் மூத்தவராவர்.

— தர்மபதம்

## நமது நோக்கு

# வலது குறைந்தோரின் வாழ்க்கை நலம்

அன்பு இல்லாதவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் சுயநலவழியில் தமக்கே செலவழிந்து பயனற்றுப் போகிறது. அன்பு என்னும் குணம் நிறைந்த உள்ளத்தைப் படைத்தவர்கள் உலகத்தின் செல்வம்' ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய எலும்பும் பிறருடைய சொத்தாகிவிடுகிறது.

திருக்குறளில் விளக்கப்பட்ட இந்தப் பேருண்மையை நினைக்குங்கால் மேனாட்டுப் பரோபகாரம் பரந்திருக்குமளவிற்கு நாம் இதற்குரிய சமுதாயஅமைப்பைச் செப்பன் செய்திருக்கிறோமா என்ற ஐயம் முன்னிற்கின்றது.

தமிழ் முனிவர் அருளிய அறவாக்குகள் அனைத்துலகின் சொத்தான காலத்தில் தமிழ்மக்கள் வாழ்வு ஏட்டுச் சுரைக்காயென்ற கண்டனம் நியாயமானது.

குறிப்பாக எமது சமூகத்தின் குறைபாடுகளில் செவிப்புலன் கட்புலன் இழந்தோர், அங்கவீனர் போன்ற வலதுகுறைந்தவர்களுக்குரிய கல்வி, அவர்களில் மறைந்து கிடக்கும் பேராற்றலை கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி மிகக்குறைவாகவே இருந்து வருகின்றது. ஆனல் இவ்வித முற்போக்கு நடவடிக்கைகள் 'மெத்த வளருகின்றன மேற்கில்'.

ஒரு குடும்பத்தில் பிறக்கும் பிள்ளை ஒன்று கட்புலனற்றதாகிவிட்டால், அந்த நெருக்கடியில் ஹெலின் கெலரின் (Helen Keller) சுயசரிதை எங்களில் எத்தனை பேருக்கு உற்சாகமூட்டக் கூடியதாகவிருக்கிறது? மிக மலிவான பதிப்பில் பெறக் கூடிய அந்நூல் எல்லோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய நூல். இலங்கை வரவிருக்கும் அன்னை தெரோசாவின் அற்புத சாதனைகள் எத்தனை பேருக்குத் தெரியும்?

தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாது பிறர்க்கே தம்முடைய எலும்பையும் கொடுக்கும் பண்புடைய மக்களாகத் திகழவேண்டுமானல், இன்றைய ஆராய்ச்சி உலகம் வலது குறைந்தவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த பலவழிகளை வகுத்திருப்பதை அறியவேண்டும்.

இவற்றைச் செயற்படுத்த முன்வரும் மனிதாபிமானிகள், கல்விபுகட்ட தம்மை அர்ப்பணிப்போர், பிள்ளைகளை வளர்த்து உருவாக்கும் பெற்ருேர், தங்கள் பாசத்தினல்தாங்களே ஆத்மீக பலமுடைய பெரியவராகிருர்கள்: இந்த உண்மையை நாம் உணரத்தவறுவதினல் எங்கள் சமூகம் வாய்ப்பேச்சில் பெரும் வீரமுடையதாகவும் அநுட்டானத்தில் வீழ்ச்சியுடையதாயும் கணிக்கப்பட்டுவருகின்றது.

ஐரோப்பிய அமெரிக்க தேசங்களில் வலதுகுறைந்தோர் கல்வி, தொழில் சமுதாயசமத்துவம் என்ற அடிப்படை உரிமைகளுக்காக மாபெரும் ஸ்தாபனங்கள் தங்களுக்கும்வேற்றுநாடுகளுக்கும் பேருதவி புரிவதில் முன்னிற்கின்றன.

இந்த முன்னேற்றத்தின் பயன்களை நாமும்பின்பற்றி எங்கள் இளம் 'செல்வங்களை' அலட்சியம் செய்யாது முழு மனிதராக்குவதற்கு முன்வர வேண்டுமென்று பேராசிரியர் நேசையா யாழ்ப்பாணம் கைதடி நவீல்ட் பாடசாலை பரிசளிப்புவிழாவில் நிகழ்த்திய பேருரையில் சரியாக வற்புறுத்தியிருப்பது எமது சமூகத்தின் சிந்தனைக்குரியது.

மனநோய், கயரோகம் போன்ற பிணிகளால் பீடிக்கப்பட்டோரை குடும்பத்தினர் மறைத்து, ஒதுக்கி வைக்கும் மூடப்பழக்கம் இன்று ஒழிந்துவிட்டது: ஆனல் கட்புலன் செவிப்புலன் அற்ற பிள்ளைகள், அங்கவீனர்கள் எம்மைப் போல் சாதாரணபிறவிகளென்றும், போதிய பொருத்தமான பயிற்சியால், அசாதாரணவீரர்களாகலாமென்ற விளக்கம் இன்றும் எங்கள் மத்தியில் நன்ருகப்பரவவில்லை.

தமிழ் மக்களுக்கென இவ்வித பாடசாலை ஒன்றே ஒன்று யாழ்ப்பாணம் கைதடியில் வளர்ச்சி பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது. ஆனல் தேவைக்கேற்ற வசதிகள் கைகூட வேண்டுமாயின், சமூகம் குறிப்பாகப்பெற்ருேர், பெரியோர் இப்பிள்ளைகளின் நலனில் விசேட அக்கறை எடுக்கவேண்டுமென்பது விளக்கந் தேவையில்லை.

# அனதை நகரமா?

இந்த நாடே எமது சொந்தநாடு என்றும் அதன் சுதந்திரம் இங்கு வாழும் தமிழ் மக்களின் கைக்கு இன்னும் அகப்படவில்லையென்றும் வாதாடும் இயக்கத்தின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணமே!

மாவட்டத்தின் பெயரும் மாநகரின் பெயரும், பரந்த அடிப்படையில் நோக்குவோமானல், தமிழ் மக்களின் தொன்னகரத்தையே குறிக்கின்றது

என்றும் ஒரு வியப்பையும் இன்று அச்சத்தையும் அதே வேளை அசாதாரண உத்வேகத்தையும் ஊட்டும் நகரம் யாழ்ப்பாணம்.

மாநகரசபைஆட்சி இடைநிறுத்தப்பட்டிருந்தாலும், நகரபிதாக்கள் இன்றில்லையென்ருலும்நகரம் அனதையாகிவிட்டதா?

நிர்வாகம் தளப்பமின்றி நடப்பதற்கு ஒவ்வொரு பிரஜையும், யாழ்ப்பாண நகர ஆணையாளரின் துரித நடவடிக்கைகளுக்கு விசேட ஒத்துழைப்பை நல்க வேண்டிய காலம் இக்காலம்.

எம்மைப் பார்த்து எவ்வகையில் ஏளனம் பண்ணலாமென்ற ஆசை அரசியல் குரோதத்தால் இன்று பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

1956ம் ஆண்டுக்குமுன்னர் வெளியான கொழும்பு ஆங்கிலத் தினசரிகளில் யாழ்ப்பாணத்தின் சாதனைகள் ஒவ்வொரு பிரசுரத்திலும் தக்க இடம் பெற்றிருந்தன.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இங்குள்ள குறைகள் மட்டுமே மிகைப்படுத்தப்பட்டு வெளிவருகின்றன வேறெதுவும்நடைபெறவில்லையென்ற கருத்து மறைமுகமாகத் தோன்றுகிறது

இதற்கு ஆதாரமளிக்க சமூக உணர்வற்ற மக்களின் செயல்கள் என்றும்குறைந்தபாடில்லை. வீதி விபத்துகள் துட்டுக்கு இரண்டு.

நகரத்தின் அழகைக்கெடுக்கும் அசுத்தமான தெருக்கள், சாலைகள், குப்பைகூழம் நிரந்தரமான இடம் பிடித்திருக்கும் பெருந்தெருக்கள், குறுக்கு வீதிகள், அசுத்தமான தண்ணீர் பாவனை, பசிதீர்க்க உள்ளிடும் மனிதரை உயிருடன் சாப்பிடவல்ல ஹோட்டல்கள், போசனசாலைகள், தேநீர்க் கடைகள் ஏராளம்!

இவற்றைச் சீர்திருத்தும் பெருமுயற்சியில் மாநகர ஆணையாளர் விசேட நடவடிக்கைகள் எடுப்பதாகச் செய்தி.

மக்கள் அனைவரும் உதவ முன்வர வேண்டுமென்று இரு கரங்களால் கொண்டு கைகூப்பி அழைக்கின்ருேம்.

# "சமாதானத்தை விரும்புவோர் எம்முடன் சேருங்கள்"

## வவனியாவில் ஆரியரத்ன

(வவனியா)

''அகிம்சையையும் சமாதானத்தையும் விரும்புகிற அனைவரும் எம்முடன் சேரலாம்'' என்று இலங்கை சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன அழைப்பு விடுத்தார்.

முல்லைத்தீவு செல்லும் வழியில் வவனியாவுக்கு வருகைதந்த கலாநிதி ஆரியரத்ன, வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வியதிகாரி திரு. ரி. சோமசுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசினர். இதையடுத்து வவனியாக் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. கே. சி யோகேஸ்வரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில், எந்தப் பிரச்னையையும் நாம் பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும் என்ருர்.

டிசம்பர் மாதம் 6ம் திகதி தாம் ஆரம்பிக்கவிருக்கும் சமாதான பாதயாத்திரை திட்டமிட்டபடி நடைபெறுமென்றும், அதற்குள் தமக்கேதும் நடைபெற்றுவிட்டாலும் கூட பாதயாத்திரை தொடர்ந்து நடைபெறுமென்றும் கூறினர். இப்பாதயாத்திரையின் போது சமாதான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தப்போவதாக அவர் கூறினர்.

வவனியாவிலிருந்து நேற்று மாலையிலேயே முல்லைத்தீவுக்குப் புறப்பட்டுச் சென்ற அவர் இன்று யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

## டிச. 6ம் திகதி
# கதிர்காமத்திலிருந்து யாத்திரை ஆரம்பம்

(வவனியா)

சர்வோதயத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்னவின் தலைமையிலான பாதயாத்திரைக் குழு திட்டமிட்டபடி டிசம்பர் 6ம் திகதி கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்

இந்நாட்டில் இன ஐக்கியமும், சமாதானமும் நிலவ உதவுவதே பாதயாத்திரையின் முக்கிய குறிக்கோள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிந்தெடுத்த இருபது சர்வோதயத் தொண்டர்களுடன் பாதயாத்திரை ஆரம்பமாகுமெனவும், யாழ்ப்பாணம்சென்றடைய 110 நாட்கள் செல்லுமெனவும் தெரியவருகின்றது.

டிசம்பர் 4ம், 5ம் திகதிகளில் கதிர்காமத்தில் சர்வமத வழிபாடுகள் நடைபெறும். அதனை அடுத்து 6ம் திகதி பாதயாத்திரை ஆரம்பமாகும்

வவனியாவுக்கு பாதயாத்திரைக் குழு மகா சிவராத்திரி தினத்தன்று வருமென இங்குள்ள சர்வோதய நிலையத்தினர் தெரிவிக்கின்றனர்.

சர்வோதய தலைவரின் பாதயாத்திரையில் மாவட்ட அடிப்படையில் பல்லாயிரக்கணக்கானேர் பங்குபற்றுவார்கள் என சர்வோதய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

எந்தவொரு அரசியல் கலப்புமின்றி பாதயாத்திரை இடம்பெறுமெனக் கூறப்படுகிறது.

## 7ம் கட்ட உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான 7ம் கட்ட உணவுப் பொருள் விநியோகம் ஏற்கனவே 5ம் 6ம் கட்ட உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டவர்க்கே வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபர் செய்துள்ளார்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்கனவே 5ம் ,6ம் கட்ட உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட அகதிகளுக்கு 7ம் கட்ட உணவுப் பொருட்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றனவென்றுஉதவிஅரசாங்கஅதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

## சாரணர் நட்புத் தினம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் தேசியவாரத்தையொட்டி யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் குருச் சாரண ஆசிர்யர் திரு. பி. சிறீஸ்கந்தராஜா தலைமையில் நட்புத்தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளரும், பயிற்றுனருமாகிய திரு. என். நல்லையா கலந்துகொண்டார். ஏனையகல்லூரி சாரணர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். குழுத்தலைவர் செல்வன் எஸ். சற்குணேஸ்வரன் நன்றி கூறினர். (க)

## அகதிகள் முகாம்களை மூடிவிடத் தீர்மானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அகதிகள் முகாம்கள் சிலவற்றினை மூடிவிட முகாம் நிர்வாகிகள் முடிவுசெய்துள்ளனர். மூடிவிடும் முகாம்களில் இருந்த அகதிகளை தனியார் காணிகளில் குடியமர்த்தவும் இவர்கள் திட்டமிட்டுவருகின்றனர். அதேவேளை கடந்த இருவாரத்தில் பலர் முகாம்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

## மின்சார வசதி செய்து தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

பரந்தனிலுள்ள குமரபுரம் வீதிகளுக்கு மின்சாரவசதி செய்துதருமாறு முன்னள் கிராமோதய சபை தலைவரும் குமரபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைத்தலைவருமாகிய திரு. ஏ. திருச்செல்வம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

# அகதிகளுக்கு காணி வழங்கும் பிரச்னை

## மக்கள் கருத்து

கைதடி அகதிகள் முகாமில் ஏற்படுத்தப்பட்ட பொருட்காட்சியினைத் திறந்து வைத்த யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அகதிகளுக்கு அரச நிலம் வழங்கப்படுவதற்கு அவர்கள் பிரஜாவுரிமை அற்றவர்களாகவிருப்பதே முட்டுக்கட்டையாகஇருக்கிறதென்று கூறியதாக அண்மையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

அகதி முகாம்களில் பிரஜாவுரிமைஅற்றவர்களோடுகாணி வீடு எதுவுமற்ற பிரஜாவுரிமை பெற்றவர்களும் வம்சாவழி இலங்கைப் பிரஜைகளும் இருக்கின்றனர். இவர்கள் தவிர பரம்பரை பரம்பரையாக தெற்கே வாழ்ந்து, பரம்பரம்பரையாகவழிவந்த காணிகளையும் வீடுகளையும் சொத்துக்களையும் பறிகொடுத்து விட்டுகையில்எதுவுமின்றி வடக்கிற்கும் கிழக்கிற்கும் வந்த பிரஜாவுரிமை பெற்ற அகதிகள் பலரினதும் பயங்கர அனுபவங்களினல் இனிமேல் தெற்கே வாசமே வேண்டாம். என்று திட்ட வட்டமாக முடிவு கட்டிவிட்ட அகதிமுகாம்களில் மட்டுமல்லாது உறவினர், நண்பர்களோடும் வசித்து வருகின்ருர்கள்.

எனவே இந்த இரு தரப்பினருக்கும் பயன் தரக்கூடிய வகையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு ஒருபாரிய குடியேற்றதிட்டத்தினைஏற்படுத்தி முகாம்களிலும் உறவினர்களோடும் நண்பர்களுடன் வாழ்ந்துவரும் நிலமற்ற, கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணி வழங்கினல் அவர்களுடைய வாழ்வில் மீண்டும் ஒளி பிறக்க ஆரம்பிக்கும்.

பிரஜாவுரிமை அற்றவர்களுக்கும் அவர்கள் பிரஜாவுரிமை பெறும்வரை அல்லது இந்தியாவிற்குத் திரும்பும் வரை தற்காலிகமாக வசிக்க காணிகளை வழங்க ஒழுங்கு செய்வதும் அவசியமாகிறது. பிரஜாவுரிமை அற்றமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு பிறரிடமிருந்து கிடைக்கும் உதவிகளும் குறைவு.

அகதி முகாம்களில் வசதிகள் பல இருப்பினும் அவைகளில் வதியும் எல்லா மக்களும் குடிசையிலென்ருலும் தனியனகவே தமக்கென ஒரு இடத்திலேயே வாழ விரும்புவர்.

க. கனகசபாபதி
யாழ்ப்பாணம்

செய்தி.

மக்கள் அனைவரும் உதவ முன்வர வேண்டுமென்று இரு கரங்களால் கொண்டு கைகூப்பி அழைக்கின்ருேம்.

## திருகோணமலை மாவட்டத்தின்
# கிராமிய அபிவிருத்திக்கு கனடா நிறுவனத்தின் உதவி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருளாதார, தொழில் நுட்ப உதவிகளை வழங்குவது பற்றி கனடா சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் பூர்வாங்க ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தூதுக் குழுவொன்று அதன் ஆசியப் பிரிவு இயக்குநர் திரு. ரொனி புரூவர் தலைமையில் திருமலை மாவட்ட அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இப்பேச்சுவார்த்தைக்கு திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பத்மநாதன் தலைமை வகித்தார்.

''திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தித் திட்ட வேலைகள் திருமலைத் துறைமுகப் பிரதேசத்தில்தான் இடம்பெறுகின்றனவேயொழிய மாவட்டத்தை உள்ளடக்கியதாக அமையவில்லை.

''மாவட்டத்தை உள்ளடக்கியதாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டமொன்றைச் செயற்படுத்துவதன்மூலம்தான் அது நிறைவேறும்''.

இவ்வாறு மேலதிக அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன் தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

தூதுக்குழுவினர் மாவட்டத்தின் அத்தியாவசியத் தேவைகளான நீர்ப்பாசனம், பெருந்தெருக்கள், விவசாயம், கிராமியக் கைத்தொழில் முதலிய துறைகளில் எவ்விதம் பங்குகொள்ளலாம் என்பது பற்றி அரசு அதிகாரிகளிடமிருந்து கேட்டறிந்து கொண்டனர்.

# வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவை திணைக்களம் உதவி

(கொழும்பு)

வறட்சியினால் பாதிக்கப்பட்ட 16 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு இம்மாதம் 15ம் திகதிமுதல் அடுத்த மாதம் 16ம் திகதிவரை சமூக சேவைகள் திணைக்களம் உதவி நிவாரணப் பணம் வழங்கவுள்ளது.

இதற்காக 5கோடி ரூபாவை திறைசேரி ஒதுக்கியுள்ளது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட 3 லட்சத்து 53,000 குடும்பங்களுக்கு இந்நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது.

புத்தளம், மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் இவ்வுதவி கிடைக்கவுள்ளது.

வறட்சி நிவாரண உதவியானது பணமாகவும், உணவு முத்திரையாகவும் வழங்கப்படுமென்று சமூக சேவைத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

[வெ]

# இருசாரார் மோதல்: இளைஞர் பலி!

(மாவிட்டபுரம்)

மயிலிட்டியில் இரு சாராருக்கிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

பலர் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த கந்தசாமி ராகவன் (வயது 17) என்ற இளைஞரே பலியானவராவார். இவரது சகோதரரான முருகையா என்பவரும் பலத்த காயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவங்களின் எதிரொலியாக இப்பகுதியில் பொலிஸ் ரோந்து இப்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளது.

பழைய பகைமையே இந்த மோதலுக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

## நியமனம்

(கரவெட்டி)

இலங்கையின் மறைபரப்புப் பணித் தேசிய இயக்குநராக கொழும்பு மறை மாவட்டத்தின் களுத்துறைப்பங்கின் பங்குத்தந்தை அருட்திரு. மல்கம் ரஞ்சித் அடிகளார் நியமிக்கப் பட்டுள்ளார்.

பல ஆண்டுகாலமாக இப்பணியை ஆற்றிவந்த வண. பிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் திருமலை-மட்டுநகர் ஆயராக நியமிக்கப்பட்டுள்ளதனாலேயே இவருக்கு இப்பதவி கிடைத்துள்ளது. வேருவிலயைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார் ரஞ்சித் ரோமாபுரிப் பல்கலைக் கழகப் பட்டதாரி ஆவார்.


வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

TFC த பிறவுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23680

COLOMbo Studio

பிரயாணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


## விவசாயக் கடன் செலுத்தாதோர் மீது நடவடிக்கை

(திருகோணமலை)

விவசாய அடையாள அட்டையின்மீது பெறப்பட்ட கடனை மீளச்செலுத்தாதோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். திருகோணமலை இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. வி. விக்னேஸ்வரனிற்கும், உதவி கமத்தொழில் ஆணையாளர் திரு பேருகொட ஆராய்ச்சிக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

''இலங்கை வங்கியின் திருமலை மாவட்டத்தினைச்சேர்ந்த பல்வேறு கிளைகளிலும் வழங்கப்பட்ட விவசாயக் கடனில் பெரும்பகுதி இதுவரை மீளச் செலுத்தப்படாமல் இருப்பதாகவும், இவ்வாறு மீளச் செலுத்தாதோருக்குச் சலுகை வழங்கும் நோக்குடன் திருமலை உதவி கமத்தொழில் ஆணையாளரினால் சுயவிசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுக் கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும். வங்கியினால் வழங்கப்பட்ட சலுகையினைப் பயன்படுத்த விவசாயிகள் பலரும் தவறிவிட்டமையினால் அவர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## வேலணை இளைஞர் கழகம் வெற்றி

(வேலணை)

வேலணை இளைஞர் விளையாட்டுக்கழகத்தினருக்கும் வேலணை மேற்கு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வேலணை இளைஞர் விளையாட்டுக்கழகம் 2—1 என்ற கோல்கணக்கில் வேலணை மேற்கு இளைஞர் விளையாட்டுக்கோஷ்டியைவெற்றிகொண்டது.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

(சூ)

## நாட்டின் சூழ்நிலை வழமைக்கு திரும்பாததால்
# முன்னைய இடங்களுக்குத் திரும்பிச் செல்வதில்லை
### ஆசிரியர்கள் திருமலையில் தீர்மானம்

(திருகோணமலை)

ஜூலை வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழாசிரியர்களின் கூட்டமொன்று திருகோணமலை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

''ஜூலை வன்செயல்கள் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வட. கிழக்கு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த தமிழ் ஆசிரியர்கள் அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்க தமது சொந்த மாவட்டங்களுக்கு நிரந்தர இடமாற்றம் கோரி தனித்தனியாக கல்வியமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தனர். ஆனால் இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு எந்தவிதமான முடிவுகளும் இவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

இதுதொடர்பாக ஜனாதிபதி, கல்வியமைச்சர், கிராமிய தொழில்துறை அமைச்சர், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோரை இவ்விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு நீதி வழங்கவேண்டும்.

''கல்வியமைச்சின் செயலாளர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று இடம்பெயர்ந்த இவ்வாசிரியர்களின் இழப்புக்கள், அவர்களுக்கேற்பட்ட பாதிப்புக்கள், தனிப்பட்ட பிரச்னைகள் என்பனவற்றை நேரிலேயே ஆராய்ந்து இவ்வாசிரியர்களின் கோரிக்கைக்கு நீதியான தொரு முடிவை வழங்கவேண்டும்

''திருகோணமலை மாவட்டத்தில் தற்போது சுமார் 1200 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. ஜூலை வன்செயல்கள காரணமாக ஏனைய மாவட்டங்களில் இருந்து திருமலை மாவட்டத்திற்கு 30 தமிழர் ஆசிரியர் இடம்பெயர்ந்து வந்துள்ளனர். எனவே இடம்பெயர்ந்து வந்துள்ள இந்த 30 ஆசிரியர்களையும் இங்குள்ள காலி இடங்களுக்கு நியமனஞ் செய்ய அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.'' (வெ)

பாடசாலை

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென், பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் 'ஏ' பிரிவில் 4—2 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில், சென். பற்றிக்ஸ் 3—2 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

### சென். ஜோன்ஸ் வெற்றி

'ஸி' பிரிவுகளிடையேநடைபெற்ற ரசிப்பான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 5—4 கோல்களால் வெற்றி பெற்றது, இப்போட்டிக்கு திரு. லாஸறஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

### வெற்றி-தோல்வி இல்லை

யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டி வெற்றி-தோல்வியின்றி (2—2) முடிவடைந்தது.

இப்போட்டிக்கு திரு. எஸ். எம். மாட்டீன் மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்படி போட்டிகள் அனைத்தும் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது (வி)

## கிளிநொச்சி செய்திகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர அருள் மிகு முருகன் ஆலயத்தில் சூரசங்காரவிழா சிறப்பாக நடைபெற்றது. மாங்குளம், துணுக்காய் போன்ற தூரஇடங்களிலும் இருந்து பக்தர்கள் இம்முறை கலந்து கொண்டனர். வழமையை விடமிகக்கூடுதலானோர் இம்முறை கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சி செயலகக் கட்டிடம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கான நிரந்தரக் கட்டிடம் காணி அலுவலகத்திற்கு பின்பாக அமையவுள்ளது.

உத்தேச செயலகக் கட்டிடத்திற்கான நிலத்தை கிளிநொச்சிமாவட்டத்தின் அரசாங்க அதிபராக பொறுப்பேற்கவுள்ள திரு. என். ஜெயநாதன் அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார்.

### விழிப்புக்குழு

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களிலுள்ள பிரதமதபால் நிலையங்களில் பொதுமக்களடங்கிய விழுப்புக்குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தபால் நிலையங்களைப் பாதுகாக்கும் நோக்கமாகவே இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அங்குரார்ப்பண வைபவங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தேங்காய் விலை உயர்வு

கிளிநொச்சியில் தேங்காயின் விலை என்றுமில்லாத வகையில் உயர்ந்துவிட்டது.

(8ம் பக்கம் ப


பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அல்லது கைத்தறியில் அனுபவம் உள்ளவர்களும், மின்தறியில் பயிற்சி பெற்று நெசவாளர்களாக வேலை செய்ய விரும்புபவர்களும் 26-11-1983ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

சீமா சில்க் இண்டஸ்றீஸ் லிமிட்,

பலாலி வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

போன்: 23170 9924

## இன்றைய பலன்...

(3-ம் பக்கத் தொடர்சி)

யாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவி **உயர்வுக்கும் இடமுண்டு.**

தனு: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் **புகழ் அடைவர். இனிமையான** அழைப்பு இன்று கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும். அறிஞர் சந்திப்பு நிகழும்.

மகரம்: ஒளிமயமான நாள். ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்துக்குப் பெற்றோரும் துணை நிற்பர். விருந்தினர் வருகையால் வீடே கலகலப்பாகும்.

கும்பம்: துஷ்டர்கள் உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டி வைக்கும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

மீனம்: சிரித்துப் பேசுபவர்கள் இன்று சீறிவிழுவார்கள். உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வீர்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## யாருடைய மூக்குக் கண்ணாடி?

சுண்டிக்குளி தபால் நிலைய கவுன்டரில் கண்டெடுக்கப்பட்ட மூக்குக்கண்ணாடியொன்றினை தபால் அதிபர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை:

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.
6-02 'பிக் புளூமாபின்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-0 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-15 சிங்கள நிகழ்ச்சி
7-45 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 நாடகநிகழ்ச்சி (சிங்களம்)
9-15 'எங்க மாமா' - தமிழ்த் திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி.

## சர்வோதயத்தலைவரின் இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணம்வரும் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன இன்றுகாலை 9-30 மணிக்குப் புங்குடுதீவில் சர்வோதய நிலையத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

புங்குடுதீவு பொதுமக்கள் சர்வோதய ஊழியர்கள் மற்றும் பிரமுகர்களுடன் ஆலோசனைகள் நடத்துவார்.

இன்று பிற்பகல் 3மணிமுதல் நான்கு மணிவரை யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் ஆலோசனைகளில் பங்குபற்றுவார்

இன்று மாலை 6 மணியளவில் ரோட்டரிக்கழகப்பிரமுகர் திரு. அரசரத்தினம் இல்லத்தில் ரோட்டரிக் சுழகப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்துவார்.

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் திணைக்களத்தில் உதவிப்பணிப்பாளராகவிருந்து ஒய்வுபெற்ற திரு கே. கெங்காதரனின் சேவைகளைப் பாராட்டுமுகமாக இலங்கைச் சர்வோதய இயக்கத்தின் யாழ்ப்பாணக்கிளை நிகழ்ச்சியொன்றை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றது. டிசம்பர் மாதம் நடத்தப்படவிருக்கும் இச்சேவைநலப் பாராட்டு விழாவில் வேறும்பல பொது நலஸ்தாபனங்களும் கலந்து கொள்ளவிருக்கின்றன.

திரு. கெங்காதரன் சமூக சேவைகள் திணைக்களத்தில் 32 ஆண்டு காலம் பணிபுரிந்துள்ளார்.

# முல்லைத்தீவு அபிவிருத்திச் சபைக் கேள்வி அறிவித்தல் - 1984.

மாவட்ட அபிவிருத்திச்சபை, முல்லைத்தீவு 11-11-1983

முல்லைத்தீவு அபிவிருத்திச்சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 1984-ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1984-ம் ஆண்டு மார்கழி 31-ம் திகதி வரை குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் (இரு பிரதிகள்) 07.12 1983-ம் திகதி பகல் 12 மணி வரை முல்லைத்தீவு அபிவிருத்திச் சபையின் கேள்விச் சபைத் தலைவரினுல் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்களை அவ்வவ் உப அலுவலகங்களிலிருந்து கேள்விப் பத்திர வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திய பின்பு 23.11.1983-ம் திகதி காலை 9.00 மணியிலிருந்து 07-12-1983-ம் திகதி காலை 10 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பற்றிய முழு விபரங்களையும், கேள்விப் பிணைத்தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. கே. ஞானச்சந்திரன்
கேள்விச் சபைத் தலைவரும் மாவட்டச் செயலாளரும்,
முல்லைத்தீவு அபிவிருத்திச்சபை, முல்லைத்தீவு.

முல்லைத்தீவு, அபிவிருத்திச் சபை,
முல்லைத்தீவு.

## சந்தைகள், கடைகள், மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள் விபரங்கள்

| உப அலுவலகம் | விடயம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | முல்லைத்தீவுச் சந்தை மாட்டிறைச் | 217011 0 | 50-00 | 5000-00 |
| | சிக் கடை இல. 1 | 25495 00 | 50-00 | 3000-00 |
| | மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 25535 00 | 50.00 | 3000 00 |
| | ஆட்டிறைச்சிக் கடை | 15360.00 | 50-00 | 2000-00 |
| முள்ளியவளை ,, | தண்ணீரூற்றுச் சந்தை | 13565.00 | 50-00 | 2000-00 |
| | முள்ளியவளைச் சந்தை | 7655.00 | 50-00 | 1000-00 |
| | ஆலடிச் சந்தை | 4800.00 | 50-00 | 1000-00 |
| | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக் கடை | 14005.00 | 50-00 | 2500-00 |
| | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக் கடை | 3012.00 | 50-00 | 1000-00 |
| | முள்ளியவளை மாட்டிறைச்சிக் கடை | 4800.00 | 50-00 | 1000-00 |
| | சிலாவத்தை மாட்டிறைச்சிக் கடை | 5320.00 | 50-00 | 1000-00 |
| | முள்ளியவளைச் சந்தைக் கடைகள் | 1000.00 | 50-00 | 250-00 |
| | ,, ,, | 1000.00 | 50-00 | 250-00 |
| | ,, ,, | 1000.00 | 50-00 | 250-00 |
| | தண்ணீரூற்றுச் சந்தை | 1215 00 | 50-00 | 250-00 |
| ஒட்டிசுட்டான் | ஒட்டிசுட்டான் சந்தை | 1500.00 | 50-00 | 250-00 |
| | ஒட்டிசுட்டான் இறைச்சிக்கடை | 4550.00 | 50-00 | 500 00 |
| ஒலுமடு ,, | மாங்குளச் சந்தை | 16500 00 | 50-00 | 2500-00 |
| | முருகண்டிச் சந்தை | 1000 00 | 50-00 | 250-00 |
| புதுக்குடியிருப்பு ,, | புதுக்குடியிருப்புச் சந்தை | 36991.00 | 50-00 | 3000-00 |
| | புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக் கடை | 8049.00 | 50-00 | 1000-00 |
| முள்ளிவாய்க்கால் ,, | மாட்டிறைச்சிக் கடை | 2731.00 | 50-00 | 500-00 |
| | சந்தைக் கடை | 1000.00 | 50-00 | 250-00 |
| செம்மலை ,, | குமுளமுனைச் சந்தை | 2128 00 | 50-00 | 500-00 |
| | அளம்பில் சந்தை | 1000.00 | 50-00 | 250-00 |
| | செம்மலைச் சந்தை | — | — | — |
| | நாயாறு மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 50-00 | 250-00 |
| | அளம்பில் மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 50 00 | 250-00 |
| | அளம்பில் வைத்தியசாலை | 100 00 | 50-00 | 50-00 |
| | குமுளமுனைச் சந்தைக் கடை இல. 1 | 100-00 | 50-00 | 50-00 |
| | ,, ,, இல. 2 | 100.00 | 50-00 | 50-00 |
| கொக்குளாய் ,, | கொக்குளாய் இறைச்சிக் கடை | 2056.00 | 50-00 | 250-00 |
| | கொக்குளாய்ச் சந்தை | | | |
| | கொக்குத்தொடுவாய் சந்தை | | | |
| பாண்டியன்குளம் ,, | சந்தைக் கட்டிட அறை வாடகை இல. 1 | 100.00 | 50-00 | 50-00 |
| | ,, ,, இல. 2 | 100.00 | 50-00 | 50-00 |
| துணுக்காய் ,, | துணுக்காய் சந்தை | 1000.00 | 50-00 | 250-00 |
| | யோகபுரம் சந்தை | 1100.00 | 50-00 | 250-00 |
| புதுக்குடியிருப்பு | ஆட்டிறைச்சிக் கடை | 3000-00 | 50-00 | 1000-00 |
| | சந்தை அறை | 100-00 | 50-00 | 50-00 |
| செம்மலை | சந்தை | 250-00 | 50-00 | 125-00 |
| கொக்குளாய் | குக்குளாய் சந்தை | 250-00 | 50-00 | 125-00 |
| | வீரகண்டமுறிப்பு, கொக்குத்தொடுவாய் | 250-00 | 50-00 | 125-00 |

(9909)

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**ஊரும் உறவும்**
(கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-30
சிவகுமார் - சுஜாதா
**பூந்தளிர்**
(கலர்)

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00, 9-30
ராஜீவ் - ஜோதி ஸ்ரீ நாத்
**ரயில்**
**பயணங்களில்**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஸ்ரீபிரியா - ஜெயபாரதி
கமல் - ரஜனி - ஜெமினி
**அலாவுதீனும்**
**அற்புத விளக்கும்**
(கலர் - புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**
(புதிய பிரதி)
17-11-83 முதல்
**சிவகெங்கைச்சீமை**

THE MOST EXPLOSIVE PICTURE OF THE YEAR
**Regal** Jaffna
From Today
Daily 10-30 a m 2-30
4-45, 7-00 only
CHARLES BRONSON..
**TELEFON**
a terrifying action packed-adventure
வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை**
**காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
ஒரே ஜனத்திரள்!
அத்தனை பேரும் பேசிக்
கொள்வது என்ன?
இதுவரை யாழ். நகரில்
இப்படியொரு
கராட்டிப் படம்
காண்பிக்கப்படவில்லையே!
அத்தனை திறமையான
கராட்டி சாகஸங்களை
நீங்கள் தவறாது
கண்டிப்பாக கண்டுகளிக்க
வேண்டுமே!!
பார்த்தவர்கள் அனைவரும்
பாராட்டுகின்றனர்.
**36th Chamber of Shaoline**
தினசரி 4 காட்சிகள்

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய**
**சுந்தரம்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30 2-00, 4-30, 7-00
URSULA ANDRESS
LAURENCE OLIVER
**Clash of The Titans**
(Entertainment for the Whole Family)
25ந் திகதி முதல்
மூன்றும் பிறை


## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில் நிறுவனத்தின் 1983- 84 ஆண்டுக்கான வணிக மாணவ மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வன் சி. பிரேமானந்தன், உப தலைவர்: செல்வி சி.வசந்தாதேவி, இணைச்செயலாளர்கள்: செல்வன் வி.அன்ரன் மரியதாஸ், செல்வன் அ முருகானந்தன், பொருளாளர்: கு.அன்னலிங்கம், பத்திராதிபர்கள்: சி. சுரேந்திரன், இ.ஆதிலட்சுமி கணக்காய்வாளர்: கு.மகேந்திரன் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (சு)


வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
**26%** தொடக்கம் **30%** வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபா 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப்பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23698


### பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற உரும்பிராயை சேர்ந்த பொன்னையா சிவபாதம் என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில் -மரணமெய்தியவர்

பொன்னையா சிவபாதம் கைம்பெண் இராஜேஸ்வரி
உரும்பிராய் மனுதார்
வழ. இல. T 3645

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு வைகாசி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

தயாரித்தவர்
**அ. பரமராஜா**
மனுதாரின் சட்டத்தரணி
31-10-83.

காலம் 2-12-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

9914

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 1984-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1984 தொடக்கம் 31-12-1984 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க்குறிப்பிடுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 29-11-83-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வியாபாரம் | கடை இல. | சென்ற வருடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ் 3 | 26687-90 | 500-00 | 25-00 |
| 2. மாட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ். 4 | 25767-00 | 500-00 | 25-00 |
| 3. ஆட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ். 1 | 8125-00 | 500-00 | 25-00 |
| 4. ஆட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ். 2 | 7100-00 | 500-00 | 25-00 |

மேற்படி வைப்புப்பணமும், கேள்விப் படிவக்கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 28-11-83-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக்கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப் பணமும், படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**த. நவரத்தினராசா,**
தலைவருக்காக,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
10-11-1983.

(9877)


# பிரத்தியேக வகுப்புகள்

பௌதிகம்:— **திரு. N. பத்மநாதன்**

இரசாயனம்:— **திரு. K. M. இராமநாதன்**

**புதிய வார இறுதி வகுப்பு**

**ஆரம்பம்: 19-11-83 சனி காலை 10-00 மணி**

பௌதிக, இரசாயன பிரத்தியேக வகுப்புகள் இவ் ஆசிரியர்களால் இங்கு மட்டும் நடாத்தப்படும்.

**15 2/4, மணியம்ஸ் கட்டடம்,**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும் நாடவேண்டியது

**வீனஸ்** 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

# வடக்கு அபிவிருத்தித் திட்டங்களை கனடா அதிகாரி பார்வையிட்டார்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பொருளாதார சமூகத் துறை பற்றி அறியும் நோக்கமாக கனடாவிலுள்ள சர்வதேச அபிவிருத்தி ஏஜென்ஸி நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுள் ஒருவரான சலாநிதி புரூவ, வடபகுதிக்கு விஜயம் செய்தார்

இவர் கடந்த மூன்று நாட்களாக யாழ். மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தித் திட்ட வேலைகளைப் பார்வையிட்டார்

இவருடன் இலங்கையிலுள்ள கனடா தூதுவர் செல்வி சதலண்ட், திட்டமிடல் செயற்படுத்தும் அமைச்சின் செயலாளர் கலாநிதி ஏ.எஸ். குணசிங்கம் ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

யாழ் அரசாங்க அதிபரும் யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் ஆகியோர் இக்குழுவினரை யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகிய பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அபிவிருத்தித் திட்ட வேலைகளைக்காண்பித்து, விளக்கமளித்தனர்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த அதிகாரிகள் குழுவினர், ஆஸ்பத்திரியிலுள்ள வைத்திய அதிகாரியையும், நிபுணர்களையும் சந்தித்து ஆலோசனை நடாத்தினர்.

ஆஸ்பத்திரிக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகள் குறித்து இக்குழுவிடம் வலியுறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கனேடிய அதிகாரியைக் கொண்ட குழுவினர் சென்றபோது பல்கலைக்கழக வேந்தர் திரு. மாணிக்கவாசகர், பதிவாளர் திரு. எஸ். எஸ். தர்மபாலன், மற்றும் பேராசிரியர்களும் வரவேற்று பல்கலைக் கழகக் குறைபாடுகள் பற்றி எடுத்துக்கூறினர்.

மேலும் அச்சுவேலி கைத்தொழில்பேட்டை, பருத்தித்துறை திக்கம் பனம்பொருள் தொழிற்சாலைகள், பனம் அபிவிருத்தித்திட்ட வேலைகளைப் பார்வையிட்டனர்.

காங்கேசன்துறைமுகம், மட்டுவில் பட்டு நூல் நெசவு செய்யும் இடங்கள், கிளிநொச்சி அகதிகள் முகாம் பால் பதனிடும் தொழில் நிலையம், சமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றையும் பார்வையிட்டுள்ளனர்.

தாம் பார்வையிட்ட அபிவிருத்தி வேலைகள் திருப்திகரமான முறையில் நடைபெறுவதைப் பாராட்டிய கனடா அதிகாரி முடிந்தளவு நிதி உதவி அளிப்பதாக உறுதி அளித்துள்ளார். (மா)

# அகதிகள் முகாமில் சாரணர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் தேசிய வாரத்தையொட்டி யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 20 சாரணர்கள் பண்ணை அகதிகள் முகாம் சுற்றுடலைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்தார்கள்.

குருச்சாரண ஆசிரியர் பி. சிறிஸ்கந்தராஜா தலைமை வகித்தார். முகாமின் நிர்வாகத்தினர், சாரணர்களுக்கு மதிய உணவளித்ததுடன் சிரமதான வேலையைப் பாராட்டினர். முகாம் முகாமையாளர் திரு. ஆர். நடராசா இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்.

சாரணர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பாராட்டு பத்திரங்கள் அகில உலக இந்து மகாசபையின் யாழ். தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமியால் வழங்கப்பட்டது. (க)

## கிளிநொச்சி செய்திகள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தேங்காயின் விலை ஆறு ரூபாவரை விற்கப்படுகிறது. அத்துடன் தேங்காய்க்குத் தட்டுப்பாடும் நிலவுகிறது. தென்னிலங்கை வர்த்தகர்களும் தேங்காயை இங்கு கொண்டு வந்து விற்பனைசெய்வதை நிறுத்தியுள்ளனர்.

### வயிற்றோட்ட நோய்

கிளிநொச்சியில் குழந்தைகள் மத்தியில் வயிற்றோட்ட நோய் பரவலாக காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரியிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் கூடுதலானோர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். சுகாதாரப்பகுதியினர் இந்நோயைக் கட்டுப்படுத்த தீவிரமுயற்சிகளைமேற்கொண்டு வருகின்றனர்.

# மரண அறிவித்தல்

## கோவிந்தர் பூபாலரட்ணம்

கோவிந்தர் பூபாலரட்ணம் கொழும்பில் அகால மரணமானர். இவர் கைதடி தெற்கு கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு Sri Lanka Hosiery and Knitting Industriesல் கணக்காளராக கடமையாற்றியவரும், கோவிந்தர், காலம்சென்ற இராசமுத்து ஆகியோரது அன்புமகனும், நாகேந்திரம் (தாதிய உத்தியோகத்தர் யாழ். அரசினர் வைத்தியசாலை), தேவராசா (பொதுமுகாமையாளர் ப.நோ.கூ.ச.பூநகரி), புவனேஸ்வரி, பூமணிதேவி, மனோன்மணிதேவி ஆகியோரது அன்புச் சகோதரரும், வே. பாண்டிராசா, வே. முத்துராசா (ப. நோ. கூ. ச. கைதடி), நா. நாகரத்தினம் (நெசவு போதனாசிரியர் கைதடி), தே. இராசேஸ்வரி (ப.நோ.கூ.ச. பூநகரி) ஆகியோரது அன்பு மைத்துனருமாவர். அன்னாரது இறுதிக்கிரியைகள் 17-11-83 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கைதடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9947

# மரண அறிவித்தல்

## முருகேசு கனகசபை

குப்பிழானைச் சேர்ந்த முருகேசு கனகசபை காலமானர். கோப்பாய் உதவி அ: அதிபர் காரியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அன்னார், அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆசிரியர் திரு. மு வைத்திலிங்கத்தின் தம்பியாரும், திருமதி. இ. புவனேஸ்வரி (ஆசிரியை), திருமதி. சோ. சாரதாம்பாள், திரு. சிவனேசராசா (இ.போ.ச), திருமதி. க. வசந்தரா, திருமதி. த. புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ந. இரத்தினசிங்கம் (ஆசிரியர்), திரு சோதிவேல், திரு. கணேசசுந்தரம், திரு. தம்பிராசா, திருமதி. சி. திருமலர் ஆகியோரின் அன்பு மாமனருமாவர். அன்னாரின் பூதவுடல் நேற்று (15-11-83) மாலை குப்பிழான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இங்ஙனம் திரு. க. சிவனேசராசா மகன்)

9933

# கீரிமலையில் இளைஞர் சடலம்

(மாவிட்டபுரம்)

கீரிமலை வலித்தூண்டல் கடற்கரையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை காணப்பட்டு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

25 வயது மதிக்கத்தக்க இவ் விளைஞரின் மரண விசாரணை இன்று நடைபெறும்.

## ஓய்வூதியம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் காத்திருந்தனர்

சிலர் யாழ், அரசாங்க அதிபரைச் சந்தித்து தங்கள் நிலைமையை விளக்கவேண்டும் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தனர்.

''நாளைக்காவது கிடைக்காதா?'' என்ற ஆவலில் சிலர் தபால் அலுவலகத்தில் உத்தியோகத்தர்களைக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார்கள். (க)

## ஈழத்தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழர் பிரச்னை குறித்தும் பேசினர்.

அவர் பேசுகையில் கூறியதாவது:.

''இலங்கைத்தமிழர் பிரச்னை மிக முக்கியமான தொன்று மிக நிதானமாக அணுகவேண்டிய பிரச்னை அவசர முடிவுகளை நாம் எடுத்துவிடக் கூடாது. நன்கு சிந்தித்து. வருங்கால விளைவுகளை எண்ணி, நாம் செயற்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இவற்றை நாம் முதலில் தீர்த்து வைக்கவேண்டும். அவர்களை ஒற்றுமைப் படுத்த வேண்டும்.

மத்திய அரசுடன் சச்சரவு ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை. பிரச்னைகளைப் பொறுத்து நாம் மத்திய அரசை ஆதரிக்கிறோம் பொருந்தாத பிரச்னைகளை எதிர்க்கிறோம். அவ்வளவுதான்''

# இப்படியும் நடக்கிறது

ஒரு பத்திரிகை, ஒரு சஞ்சிகை ஆரம்பிப்பது பெரிய புதுமை அல்ல. அதனைத் தொடர்ந்து நடத்துவது தான் 'சவால்'

'சவாலை'ச் சாதித்தவர்களும் உண்டு. சவாலுக்கு சரணடைந்தவர்களும் உண்டு. ஆனால் தமிழ் நாட்டில், ஆரம்பமோ ...... முடிவோ ...... எல்லாம் புதுமை தான்! இதில் 'லேட்டஸ்ற்' — —

திருமண ஏற்பாடுகளுக்கென்றே ஒரு பத்திரிகை இப்பொழுது வெளிவருகிறது. இதன் பெயர்; 'சுயம்வரம்'

''மணமக்கள் தேவை விளம்பரம் அதிகம் வரும் ஒரே தமிழ் இதழ்'' என்று முதல் பக்கத்தில் மகுடம் சூட்டியிருக்கிறார்கள். இந்த சஞ்சிகையின் மற்றுமொரு சிறப்பு; இதில் வரும் ராசி பலன் கூட திருமணத்தை அடிப்படையாகக் கொண்டே வெளிவருகிறது!

— ஊடுருவி

## திருமலை இடைத்தேர்தல்:

# தமிழர் கூட்டணி மறு பரிசீலனைசெய்யும்!

(யாழ்ப்பாணம்)

கூட்டணி தலைவர்களுடன், புதுடில்லியில் திரு. ஜி. பார்த்தசாரதி பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் திருமலை இடைத்தேர்தல் பற்றி கூட்டணியினர் மறுபரிசீலனை செய்யவிருக்கின்றனர்.

திருமலை தொகுதி, தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மாதம் 22ம் தேதி மீண்டும்கூடவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி யும், கூட்டணியின் நிர்வாக செயலாளருமான திரு. எம். ஆலாலசுந்தரமும் கலந்துகொள்வார்.

இச்சந்திப்பின்போதே, கூட்டணிநிலைமைபற்றி முடிவு செய்யுமெனக் கூறப்படுகிறது. (க)

# இளம் மனைவி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மீன்கறி காய்ச்சவில்லையென்று கணவன் அடித்ததால் இளம் மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று இணுவிலில் நிகழ்ந்துள்ளது.

இணுவிலைச் சேர்ந்த பாலச்சந்திரன் உமா (20 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவர்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு.எஸ் எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினர்.

மேசன் வேலை செய்யும் கணவன் நேற்றுக் காலை வேலைக்குச் சென்றுவிட்டு 11 மணியளவில் வீடு திரும்பியதாகவும், மனைவி கீரைக்கறி மட்டும் காய்ச்சியிருந்ததாகவும் ஏன் மீன்கறி காய்ச்சவில்லை என்று கணவன் கூறி இரு தடவை அடித்ததோடு சட்டியையும் உடைத்துவிட்டு, மீன் வாங்க சந்தைக்கு சென்றதாகவும், இச்சமயம் மனமுடைந்த மனைவி நச்சுதிராவகம் அருந்தினரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி, விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

## இன்று . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நிகழ்த்தும் 'பட்ஜட்' உரையில், என்ன விலைவாசிகள்உயரப்போகிறது என்று மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

துண்டுவிழும் தொகையை எப்படிச்சமாளிக்கப்போகிறார் என்பது இன்று மாலை ஆறு மணிக்குப் பின்பே தெரியவரும்.

இம்மாதம் 17ம் திகதி முதல் பட்ஜட் மீதான விவாதம் ஆரம்பமாகும். (இ)

## வீதிகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு முந்தின வருடம் 4 லட்சம் ரூபா மட்டும் ஒதுக்கப்பட்டது.

இதற்கான மதிப்பீடு. திட்டமிடல் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டாலும் மழை காரணமாக வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளும், செயல்பாடுகளும் 84 ஜனவரி மாதத்திலிருந்தே அமுலுக்கு வரும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## இந்திராவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியால் தான் ஏற்படவேண்டும் என்று உறுதியாக நம்புகிறார்கள். இந்திரா காந்தியின் செயல் முறையை பாதிக்கும்படி, யாரும் எதுவும் சொல்லக்கூடாது என்பது அவர்கள் எண்ணம். அதை நமது எதிர்கட்சிகளும் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண இதுவே சிறந்தவழி.'' (ஜெ)

## டாக்டர் பற்றுக்குறை

# புதிய நோயாளர் ஐவர் மட்டும்!

(யாழ்ப்பாணம்)

டாக்டர்கள் பற்றுக்குறை காரணமாக புதிய நோயாளர் 5 பேருக்கு மட்டுமே நம்பர் வழங்கப்படும் என்று யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர்களைப் பார்வையிடும் பகுதியில் 6வது பிரிவில்ஒட்டப்பட்டிருக்கும் பிரசுரம் ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 75 வீதமானோர்.'.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில், குழு ஒன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விரைவில் சந்திக்கவிருப்பதாகவும் அவர் கூறினர். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், வெல்கோலிக் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box/ 49,Telephone/ 22389 —24126.